மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, இந்து-சமய அறக் கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1974) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன்உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, இந்து-சமய அறக் கட்டளைகள் (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1974) நிறைவேற்றப்பட வேண்டும்."

— தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

8. 1974-ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1974).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மேலவைத் தலைவரவர்களே—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 23/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 23-ஆவது பிரிவு, சமயக் கட்டளைகள் சம்மந்தமாக, பொதுவாக மேற்பார்வையிட்டு நிர்வகிக்கும் அதிகாரத்தையும், சமயக் கட்டளைகளின் சீரான நிர்வாகத்திற்கு அவசியம் எனக் கருதக்கூடிய ஆணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரத்தையும், இந்து சமய அறக்கட்டளை ஆணையருக்கு வழங்குகிறது. மேற்சொன்ன சட்டத்தின் 23-வது பிரிவின்படி, கோயில்கள் இணைப்பு குறித்து ஆணையர் பிறப்பித்த ஆணைகளின் செல்திறன் சம்மந்தமாக, 3212, 3213/1972-ஆம் எண் ரிட் மனுக்களின் உயர்நீதி மன்றம் பிறவற்றிற்கிடையே மேசொன்ன பிரிவு, அறக்கட்டளைகளுக்கு மட்டுமே பொருந்துமே தவிர சமய நிறுவனங்களுக்குப் பொருந்தாது என்று தீர்ப்பு

வழங்கியுள்ளது. ஆகவே, மேற்சொன்ன பிரிவின் வரம்பிற்குள் கோயில்களையும் அவற்றைச் சேர்ந்த குறிப்பிட்ட கட்டளைகளையும் சேர்த்துக்கொள்ளும் வகையில், 23-ஆவது பிரிவைத் திருத்துவது அவசியம் எனக் கருதப்படுகிறது. மேற்சொன்ன நோக்கத்தை அடைய இந்தச் சட்ட வரைவு விழைகிறது.

இம்மன்றம் இதனை ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 23/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவா வர்களே—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (நான்காவது திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 23/1974) நிறைவேற்றப் பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன்உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1974-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (நான்காவது திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 23/1974) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 170 ஆம் பக்கத்தில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS